பக்கங்கள்:-22

காலை முரசு

முழக்கம்: 01 | வள்ளுவர் ஆண்டு 2055 | வைகாசி 25 | வெள்ளிக்கிழமை | 07.06.2024 | அதிர்வு 311

## மோடிக்கு சிறீ வாழ்த்து மழை



நடைபெற்று முடிந்த இந்திய நாடாளுமன்றத் தேர்தலில் வெற்றி பெற்ற தற்கமைய, தொடர்ந்து மூன்றாவது 06▶



# ரணில் இல்லையேல் மீண்டும் ‘அரகலய’ போராட்டம் வெடிக்கும்

## இப்படி எச்சரிக்கின்றது ஐ.தே.க.

**“இலங்கையின் தற்போதைய நிலைமையில் நாட்டை ஆளக்கூடிய ஒரே தலைவர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே. அவர் ஆட்சியில் தொடர வேண்டும். அவர் இல்லையேல் மீண்டும் பொருளாதாரம் படுவீழ்ச்சி அடையும். மீண்டும் ‘அரகலய’ போராட்டம் வெடிக்கும். எனவே, எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் அவரை சகல தரப்பினரும் இணைந்து வெற்றியடையச் செய்ய வேண்டும்.”** 06▶



# மொட்டுக் கட்சி வேட்பாளரை தக்க நேரத்தில் அறிவிப்போம்

## சாகர எம்.பி. தெரிவிப்பு



ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை உரிய நேரத்தில் அறிவிப்போம் என்று அக்கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

“ஸ்ரீலங்கா பொதுஜன 06▶




இந்தியத் தேர்தல் முடிவுகளை ஒட்டி இரண்டு விடயங்கள் கவனிக்கப்படத்தக்கவை.

ஒன்று – தமிழகத்தில் ‘நாற்பதுக்கு நாற்பது’ என்று சொல்லி அடித்த முதல்வர் ஸ்டாலின்.

அடுத்தது – கடந்த பத்து ஆண்டுகளாகத் தனித்துத் தமது சொந்தக் கட்சியான பாரதீய ஜனதாவுக்குக் கிட்டிய அறுதிப் பெரும்பான்மையுடன் ஏகபோகமாக ஆட்சி நடத்திய மோடி, இப்போது பங்காளிக் கட்சிகளின் தயவில் தங்கி நின்று அல்லாடும் நிலைமை.

இவை இரண்டுக்குமே பிரதான காரண கர்த்தாக்கள் இருவர். அவர்களோடு 06▶




# உலகத் தரவரிசைப் பட்டியலில் கொழும்புப் பல்கலை சாதனை



முதல்முறையாக கொழும்புப் பல்கலைக்கழகம் உலகின் 1,000 சிறந்த பல்கலைக்கழகங்களிற்குள் இடம்பிடித்துள்ளது.

உலக பல்கலைக்கழகத் தரவரிசையில்இந்தஆண்டுகொழும்புப்பல்கலைக் கழகம் 951ஆவது இடத்தைப் பெற்றுள்ளது.

மேற்படி தகவலை துணைவேந்தர் மூத்த பேராசிரியர் எச். டி. கருணாரத்ன தெரிவித்துள்ளார்.

இலங்கையின் மிகப் பழமையான பல்கலைக்கழகம் மற்றும் அதிக மாணவர்களைக் கொண்ட பல்கலைக்கழகம் என்ற சாதனையையும் கொழும்புப் பல்கலைக்கழகம் தனதாக்கியுள்ளது.

# மீன்களின் விலை சடுதியாக உயர்வு



சந்தைகளில் மீன்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளது.

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலை காரணமாக கடற்றொழில் நடவடிக்கைகளில் ஈடுபடுவதனைத் தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் கடற்றொழிலாளர்களை அறிவுறுத்தியுள்ளது.

இந்த நிலையில் மீன்களின் விலை சடுதியாக அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த விலை அதிகரிப்பானது நுகர்வோரை மிகவும் பாதித்துள்ளது என விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

காலி பிரதான மீன் வர்த்தக நிலையத்தில் 1 கிலோகிராம் பலையா மீனின் விலை 1,300 ரூபாவாகப் பதிவாகியுள்ளது.

அத்துடன் 1 கிலோகிராம் கெலவல்லா மீனின் விலை 1,400 ரூபாவாகவும், 1 கிலோகிராம் டெலியா மீனின் விலை 1,300 ரூபாவாகவும் உள்ளது.



# வெள்ளப் பாதிப்பு காரணமாக நோய்கள் பரவும் அபாய நிலை

நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நாட்டின் சில பகுதிகள் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் வெள்ள நிலைமையுடன் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக சுகாதார அமைச்சின் செயலாளர் வைத்தியர் பாலித மஹிபால தெரிவித்துள்ளார்.

சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அத்துடன் இது தொடர்பில் மக்களை அவதானமாகச் செயற்படுமாறும் அவர் அறிவுறுத்தல் விடுத்துள்ளார்.

# வட மாகாணத்தின் அபிவிருத்தி தொடர்பில் ஜனாதிபதி விசேட கவனம் செலுத்தியுள்ளார்

## கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தகவல்



"யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வட மாகாணத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தியுள்ளார். அதற்காக அந்தப் பகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு அபிவிருத்திப் பணிகளுக்குத் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது."

– இவ்வாறு கிராமிய பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் –

"இன்று மக்கள் ஓரளவுக்கு அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். இந்த நிலையில், எமது பகுதிகளில் குறிப்பாக வவுனியா, முல்லைத்தீவு மற்றும் மன்னார் மாவட்டங்களில் அரசாங்கத்தின் பாரிய வேலைத் திட்டங்கள் நடந்து வருகின்றன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வீழ்ச்சியடைந்திருந்த இந்நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பியுள்ளார். இதனால் பொருளாதார ரீதியில் நலிவடைந்த மக்களின் வாழ்வு சீராகி வருகிறது. அத்துடன், மக்களுக்கு காணி உரிமைகளையும் ஜனாதிபதி வழங்கி வருகிறார். 20 லட்சம் காணி உறுதிகளை வழங்கும் "உறுமய" வேலைத்திட்டத்தின் கீழ் வட மாகாணத்திற்கு நேரடியாக வந்து, அந்த மக்களுக்கான முழு உரிமையுடைய காணி உறுதிகளை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

மேலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் சுமார் 18,000 பேருக்கும், வவுனியா மாவட்டத்தில் சுமார் 10,000 பேருக்கும், மன்னார் மாவட்டத்தில் சுமார் 12,000 பேருக்கும் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன. காணிகளை துரிதமாக வழங்கும் பணிகளில் ஆளணிப் பற்றாக்குறை இருப்பதாக நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கூறியிருந்தோம். அதற்கான தீர்வுகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்திருக்கின்றார்.

மேலும், கைவிடப்பட்டுள்ள குளங்கள், வாய்க்கால்கள் மற்றும் சேதமடைந்துள்ள வீதிகளைப் புனரமைக்கும் பணிகளும் எமது அமைச்சின் ஊடாக நடைபெற்று வருகின்றது. அதேபோன்று வாழ்வாதாரத்திற்கான ஆடுகள், தானியப் பயிர்ச்செய்கைக்கான விதைகள் போன்றவற்றை வழங்கும் வேலைத்திட்டமும் நடைபெற்று வருகின்றது. வெளிநாட்டு நிதிஉதவியுடன் கூடிய அபிவிருத்திப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன. பொருளாதார நெருக்கடியின்போது இடைநடுவே கைவிடப்பட்ட சுமார் 15 கிலோமீற்றர் வீதியின் அபிவிருத்திப் பணியும் நடைபெற்று வருகிறது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மாகாணம் என்ற வகையில் வட மாகாணத்தின் அபிவிருத்திப் பணிகள் குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விசேட கவனம் செலுத்தி வருகிறார். குறிப்பாக அங்கு உள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான நிதிகளை ஒதுக்கி அனைவரையும் ஒன்றிணைத்து இப்பணிகளை ஜனாதிபதி முன்னெடுத்து வருகிறார்.

மேலும், யுத்த காலப்பகுதியில் அடர்ந்த காடுகளாக அன்றி, வனப்பகுதியாக அடையாளமிடப்பட்ட, மக்கள் வாழ்ந்து வந்த காணிகளின் விடுவிப்பு பணிகளும் தற்போது படிப்படியாக நடைபெற்று வருகின்றன. தற்போது நாட்டின் பெரும் பகுதிகளில் ஏற்பட்டுள்ள வெள்ள அனர்த்த நிலைமையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான நிவாரணங்களை வழங்க உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி உரிய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

அதேபோன்று எமது பகுதிகளில் சுற்றுலாத்துறையை மேம்படுத்தல் குறித்தும் ஜனாதிபதியின் வடமாகாண விஜயத்தின்போது விசேட கவனம் செலுத்தப்பட்டது. குறிப்பாக புத்தளம் இலவங்குளத்தின் ஊடாக செல்லும் மரிச்சுக்கட்டி – மன்னார் யாழ்ப்பாண வீதியை திறக்க வேண்டிய தேவையும் இருப்பதாக நாம் ஜனாதிபதியிடம் தெரிவித்திருக்கின்றோம்." – என்றார்.




# தனது அரசியல் அலுவலகத்தை திறந்து வைத்தார் ஜனாதிபதி

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கொழும்பில் தனது அரசியல் அலுவலகத்தை நேற்றுத் திறந்து வைத்தார்.

புதிய அலுவலகம், கொழும்பு சேர் எர்னஸ்ட் டி சில்வா மாவத்தையில் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவரின் எதிர்கால அரசியல் நடவடிக்கைகள் இந்த அலுவலகத்தின் ஊடாக மேற்கொள்ளப்படும்.

நாரஹேன்பிட்டி அபயாராமாதிபதி, மேல் மாகாண பிரதம சங்கநாயக்க, கொழும்பு பல்கலைக்கழக வேந்தர் வண. கலாநிதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர், கொள்ளுப்பிட்டி வாழுகாராம மகா விகாரை உட்பட ஐந்து மகா விகாரைகளின் விகாராதிபதி, ஊவா பிராந்திய பிரதம சங்கநாயக வண, மஹரகம நந்த நாயக்க தேரர் , உள்ளிட்ட மகா சங்கத்தினர் இதன்போது பிரித் பாராயணம் செய்து ஜனாதிபதிக்கு ஆசி வழங்கியமையுடன் ஏனைய சமயத் தலைவர்களும் சமய வழிபாடுகளை நடத்தி ஆசிர்வாதங்களை வழங்கினர்.

ஜனாதிபதியின் அரசியல் அலுவலகத்தை நிறுவுவதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்தனவின் தலைமையில் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிகழ்வில் பேராசிரியர் மைத்திரி விக்ரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்பாட்டாளர்கள் பலரும் கலந்துகொண்டனர்.















# ‘ரவி-அரை நூற்றாண்டு சினிமா சுய பிரதிபலிப்பு’: ஜனாதிபதி ரணில் தலைமையில் பாராட்டு நிகழ்வு

பிரபல திரைப்பட நடிகர் ரவீந்திர ரந்தெனிய 5 தசாப்தங்களாக இலங்கைத் திரையுலகிற்கு ஆற்றிய சேவையைப் பாராட்டி “ரவி – சினிமா அரை நூற்றாண்டு சுயநினைவு” பாராட்டு விழா ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்றது.

1974 இல் திரையிடப்பட்ட ‘தரங்கா’ திரைப்படத்தின் மூலம் சினிமாவில் இணைந்த ரவீந்திர ரந்தெனிய என்ற நடிகர், சிறந்த நடிப்பாற்றல் கொண்டவர் என்பதோடு தனக்குக் கிடைத்த ஒவ்வொரு கதாபாத்திரத்திலும் சிறப்பாக நடித்து கடந்த 5 தசாப்தங்களாக இலங்கை சினிமா ரசிகர்களின் நெஞ்சங்களில் பல மறக்க முடியாத நினைவுகளை பதிக்கச் செய்தவர்.

துஹுலு மலக், பொடி மல்லி, வீரபுரன், ஜனேலய, மாயா, ஆராதனா, தடயம, திருமணப் பரிசு, சாகர ஜலய, சைலம, சிறிமெதுர, ஆனந்தா ராத்ரிய,கலுதியதகர, உள்ளிட்ட 100இற்கும் மேற்பட்ட சிங்களத் திரைப்படங்களில் தனது நடிப்புத் திறமையை வெளிப்படுத்தி சிங்களத் திரையுலகத்தை உயர்ந்த இடத்திற்கு கொண்டு செல்ல பாரிய பங்களிப்புச் செய்துள்ளார்.

திரைப்பட விமர்சகர் காமினி வேரகொட சிங்களத்திலும் உதித தேவப்பிரிய ஆங்கிலத்தில் எழுதிய ரவீந்திர ரந்தெனியவின் வாழ்க்கை வரலாறு பற்றிய இரண்டு நூல்களும் இதன்போது வெளியிடப்பட்டன. முதற்பிரதியை ஜனாதிபதியிடம் ரவீந்திர ரன்தெனிய வழங்கி வைத்தார்.

ரவீந்திர ரந்தெனியவுக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர் பல துறைகளுக்கும் பங்களிக்கக்கூடிய தலைசிறந்த நடிகர் என்று தெரிவித்தார்.

அரசியல் ரீதியாக அவர் தம்முடன் நெருக்கமாகப் பணியாற்றியமையை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, தனது அரசியல் நடவடிக்கைகளில் தமக்குக் கிடைத்த ஆதரவையும் நன்றியுடன் நினைவு கூர்ந்தார்.

















# இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு ஆறு. திருமுருகன் வாழ்த்துச் செய்தி!



"இந்தியத் திருநாட்டின் வரலாற்றில் மூன்றாவது தடவையாகப் பிரதமராகப் பதவியேற்கும் உங்களை வாழ்த்துவதில் ஆனந்தமடைகின்றேன். பாரத தேசத்தின் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் அவர் மக்களால் மீண்டும் பாரதத்தின் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளமை பெருமைக்குரிய விடயமாகும்."

– இவ்வாறு இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அகில இலங்கை இந்து மாமன்ற உப தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"தாங்கள் இலங்கைத் தமிழர்களின் நீண்டகாலப் உணர்வார். உங்கள் பதவிக் காலத்தில் இலங்கைத் தமிழர்களுக்கு நிரந்தரமான தீர்வைப் பெற்றுத் தருவீர்கள் என இவ்வேளையில் எதிர்பார்க்கின்றோம்.

தங்களது ஆத்மீக பலமும் ஆத்மீக பலமும் கடின உழைப்பும் இந்திய தேசத்தை மேலும் சிறப்பிக்கும் என்பதில் ஐயமில்லை. தங்களுக்கு எமது இதயபூர்வமான வாழ்த்துக்களைச் சமர்ப்பிக்கின்றோம்." – என்றுள்ளது.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்னொருவரையும் மூன்றாவதாக சேர்த்துக் கொள்ளலாம் என்பது எனது கணிப்பு.

ஒருவர் – தமிழக பா.ஜ.க. தலைவர் அண்ணாமலையார். அடுத்தவர் அ.தி.மு.க. தலைவர் எடப்பாடியார் (பழனிச்சாமி). மூன்றாவது நபராக தமிழக ஆளுநர் ரவியையும் சேர்த்துக் கொள்ளலாம்.

ஒரு வருடத்திற்கு முன்னர் வரை பலமாக நீடித்த பா.ஜ.க. – அ.தி.மு.க. கூட்டணியைத் தொடர இடமளித்திருந்தால் இன்று நிலைமை தலைகீழ்.

இரண்டு கட்சிகளும் இம்முறை தனித் தனியே பெற்ற வாக்குகளை சேர்த்தால், இப்போதைய நிலையில் 17 தொகுதிகளில் தி.மு.க. – காங்கிரஸ் (இண்டியா) கூட்டணியைச் சொல்லி அடித்திருக்கலாம். கூட்டாக வேலை செய்திருந்தால் நிலையை 20 அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளில் சாதகமாக்கி இருக்க முடியும்.

அப்படி நடந்திருந்தால் இரண்டு விடயங்கள் ஏற்பட்டிருக்கும்.

ஒன்று – பாரதீய ஜனதா இன்னும் வலிமையான நிலையை எட்டி இருக்கும்.

அடுத்தது – இப்போது மத்திய அரசின் ஆட்சியைத் தீர்மானிக்கும் அரசியல் கூட்டின் பங்காளிகளாக நிதீஷ் குமாரும் சந்திரபாபு நாயுடுவும் இருக்கும் 'கிங் மேக்கர்' கதிரையில் அவர்களுக்குப் பக்கத்தில் எடப்பாடியாரும் வலிமையோடு இருந்திருப்பார்.

அண்ணாமலையார்–எடப்பாடியார் இருவரினதும் அத்துமீறிய தன்னம்பிக்கை எனும் அரசியல் திமிர்த்தனம் கடைசியில் காலை வாரிவிட்டது.

இந்தத் தோல்விக்கு பின்னர் சமாளிக்கும் விதத்தில் ஏதோ 10 வீதவாக்குகளை எடுத்து விட்டோம், அது பெரிய சாதனை என்று வழமை போலவே வாதாட்ட முழக்கங்களை முன்வைக்கின்றார் அண்ணாமலையார்.

பத்து வீத வாக்குகள் என்பது சாதனைதான். உண்மைதான். ஆனால் அது பத்து ஆண்டுகள் மத்தியில் ஸ்திரமான ஆட்சியில் தொடர்ந்ததால் மாநிலத்தில் கிட்டிய வாய்ப்பு. மத்தியில் ஆட்சி பறந்தால் மாநிலத்தில் கிட்டிய பத்தும் கூடப் பறந்து விடும். கரைந்து விடும். மத்தியில் ஆட்சியை உறுதிப்படுத்திக் கொண்டுதான் தமிழக மாநிலத்தில் காலை ஊன்றுவதை மேம்படுத்தி, காலை அகலப்படுத்தலாம். அதுதான் புத்திசாலித்தனம்.

அதை விடுத்து, மாநிலத்தில் காலை ஊன்றுவதற்காக மத்தியில் ஆட்சியைப் பலவீனமாக்குவது மரத்தின் கிளையில் இருந்து கொண்டு அந்தக் கிளையை வெட்டும் புத்திசாலித்தனத்திற்கு ஒப்பானது. அதற்கு, என்ன வாதப் பிரதிவாதங்களை – 'சமாளிபிகேஷன்களை' அண்ணாமலையார் முன்வைத்தாலும் அது விதண்டாவாதமாகத்தான் இருக்கும்.

இந்தத் தேர்தலின் பின்னர் எங்கோ இருக்க வேண்டிய மோடிக்கு முதல் பின்னடைவு அண்ணாமலையால்தான்.

தேர்தல் முடிவுகளின் பின்னர் 'கிங் மேக்கர்' ஆக உயரக்கூடிய வாய்ப்பை தாமாகவே – தமது திமிர்த்தன அரசியல் மேலாதிக்க அணுகுமுறையால் – பாரதீய ஜனதா கட்சியுடனான கூட்டை முறித்து, முறியடித்துக் கொண்டார் எடப்பாடியார்.

இந்த இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஒற்றுமை குறைந்தமைக்குக் காரணமாகவும், மறுபுறம் தி.மு.கவுக்கு சார்பாக மக்கள் அனுதாபம் திரும்பக் காரணமாகவும் இருந்தவர் ஆளுநர் ரவி.

மூவரும் சேர்ந்து, 'நான் பெரியவன்', 'நீ பெரியவன்' என்று நடத்திய அரசியல் விளையாட்டினால் கடைசியில் பின்னடைவை கண்டவர் என்னவோ மோடிதான்...!

## ரணில் இல்லை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

– இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தரும் முன்னாள் அமைச்சருமான ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

"அரகலய போராட்டத்தின் விளைவாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாகப் பதவியேற்றார். அவர் தொடர்ந்து ஆட்சியில் இருக்க வேண்டும். அப்போது தான் நாடு முன்னேறிச் செல்லும். சர்வதேசமும் எமது நாட்டுக்கு உதவிகளை வழங்கும்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நம்பித்தான் சர்வதேச நாணய நிதியம் இலங்கைக்கு நிதி உதவிகளை வழங்குகின்றது என்பதை நாட்டிலுள்ள அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்." – என்றார்.

## மொட்டுக் கட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் யார் என்பதை கட்சி இன்னும் தீர்மானிக்கவில்லை.

எனினும், ஜனாதிபதித் தேர்தலை மொட்டுக் கட்சியே வெற்றிகொள்ளும். உரிய நேரத்தில் வேட்பாளர் பெயரிடப்படுவார்.

அத்துடன், அரகலயவின் பின்னணி தொடர்பில் அடுத்த எமது ஆட்சியின்போது முறையாக விசாரணை நடத்தப்பட்டு உண்மைகள் கண்டறியப்படும்.

நாட்டில் மீண்டுமொருமுறை அவ்வாறான சம்பவம் இடம்பெறாமல் இருப்பது உறுதிப்படுத்தப்படும்." – என்றார்.

## மோடிக்கு சிறி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

முறையாகவும் பாரத தேசத்தின் பிரதமராகப் பதவியேற்கவுள்ள நரேந்திர மோடிக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் வாழ்த்துரைத்துள்ளார்.

இது தொடர்பான அவரது ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:–

"தாங்கள் இந்திய மக்களின் மன உணர்வுகளை வென்றிருப்பதன் பிரதிபலிப்பாகவே மக்களவைத் தேர்தலில் பெற்றிருக்கும் இந்த வெற்றி அமைந்திருக்கின்றது. பாரதத்தின் அரசியல், பொருளாதார, சமூக நலன் சார்ந்து தாங்கள் ஆற்றவிருக்கும் பணிகளின் விளிம்பில், ஈழத் தமிழர்களுக்கும் இந்திய தேசத்துக்கும் இடையே இழையோடியிருக்கும் உறவின் கனதியை உயிர்ப்பிக்க வேண்டிய காலக்கடமையும் தங்களிடத்தே தரப்பட்டிருப்பதாக நாம் உணருகின்றோம்.

இலங்கைத் தீவில், ஈழத் தமிழ்மக்களுக்கென அர்த்தமுள்ளதும் அடிபணியாததுமான சமஷ்டி முறையிலான நிரந்தர அரசியல் தீர்வைப் பெற்றுத் தருவதில் இந்தியாவே பாதுகாப்பு அரணாக இருக்க வேண்டும் என்பதே எமது இனத்தின் நீண்டகால எதிர்பார்ப்பாகும். அந்தவகையில் தங்களது அனுசரணையும் அழுத்தமும் இன்றி இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் தமக்குரித்தான உரிமைகளுடன் வாழும் வாய்ப்பைப் பெறமுடியாதென்பதை நாம் திடமாக நம்புகின்றோம்.

போருக்குப் பின்னரும் இன, மத அடக்குமுறைகளுக்கு ஆளாகியிருக்கும் எமது மக்களின் ஆட்சி உரிமை மற்றும் அரசியல் உரிமைகளை வென்றெடுப்பதற்காக, எமது கட்சியாகிய இலங்கைத் தமிழரசுக் கட்சி உள்ளிட்ட தமிழ்த் தேசியத் தரப்புகளால் முன்னெடுக்கப்படும் முயற்சிகளில், இந்திய மத்திய அரசு தனது முதன்மையான பணிகளை ஆற்ற முன்வரவேண்டுமென்ற எதிர்பார்ப்பை எமது இனத்தின் கோரிக்கையாக தங்களிடம் முன்வைக்கின்றேன்.

இந்திய தேசத்தின் வரலாற்றுப் பக்கங்களில் தனித்துவம் மிக்க தலைவராகத் தொடர்ந்து மூன்றாவது முறையாகவும் மக்கள் ஆணை பெற்று, பாரதப் பிரதமராக ஆட்சிப்பீடம் ஏறியிருக்கும் தங்களின் பணிகள், இந்திய மற்றும் ஈழ தேசங்களின் நலனுக்கான வரலாற்றுப் பணிகளாக அமைய வாழ்த்தி நிற்கின்றேன்." – என்றுள்ளது.

# றோயல் பார்க்கொலைக் குற்றவாளிக்கு மன்னிப்பு வழங்கிய மைத்திரியின் முடிவு தவறு எனத் தீர்ப்பு!

## ரூ.10 லட்சம் நஷ்ட ஈடு வழங்க முன்னாள் ஜனாதிபதிக்குக் கட்டளை





கொழும்பு றோயல் பார்க்கொலை சம்பவம் தொடர்பில், மரண தண்டனை விதிக்கப்பட்டிருந்த ஜூட் சமந்த ஜயமஹ விற்கு பொது மன்னிப்பு வழங்க, முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன எடுத்த தீர்மானம், சட்டத்திற்கு முரணானது என உயர் நீதிமன்றம் அறிவித்துள்ளது.

இதன்படி, மைத்திரிபால சிறிசேன, வழங்கிய பொதுமன்னிப்பை செலுபடியற்றதாக்குவதற்கு உயர்நீதிமன்றம் நேற்றுத் தீர்மானித்தது.

கொழும்பு, ராஜகிரிய – றோயல் பார்க் வீட்டு தொகுதியில் 2005ஆம் ஆண்டு சுவீடன் நாட்டைச் சேர்ந்த 19 வயதான யுவதி ஒருவர் கொலை செய்யப்பட்டிருந்தார்.

இந்த சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட அந்தப் பெண்ணின் காதலரான ஜூட் சமந்த ஜயமஹவை, குற்றவாளியாக என அறிவித்து அவருக்கு மரண தண்டனை விதித்து உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

எனினும், 2019ஆம் ஆண்டு முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜூட் சமந்த ஜயமஹவிற்கு பொது மன்னிப்பு வழங்கி விடுதலை செய்திருந்தார்.

இந்நிலையில், மைத்திரிபால சிறிசேனவின் இந்த தீர்மானத்தை சவாலுக்கு உட்படுத்தி தாக்கல் செய்த மனு மீதான விசாரணையின் போதே இந்தத் தீர்ப்பை உயர் நீதிமன்றம் நேற்று வழங்கியுள்ளது.

இந்தச் சட்டத்தின் மூலம் முன்னாள் ஜனாதிபதி மைத்திரி பால சிறிசேன வேண்டுமென்றே அரசமைப்பை மீறியுள்ளார் என்று தீர்ப்பளித்த உச்ச நீதிமன்றம், தற்போது வெளிநாட்டில் உள்ள பிரதிவாதியான ஜூட் சமந்த ஜயமஹவை உள்ளூர் மற்றும் சர்வதேச மரபுகளின்படி நாடு கடத்தத் தேவையான சட்ட நடவடிக்கைகளை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டது.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நட்டஈடு வழங்க வேண்டும் எனவும் உத்தரவிடப்பட்டுள்ளது.

இதன்படி, மனுதாரருக்கு ஒரு மில்லியன் ரூபா நட்டஈடாக வழங்க உத்தரவிடப்பட்டுள்ளது.

பெண்கள் மற்றும் ஊடகக் கூட்டமைப்பினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை பரிசீலித்த நீதிபதிகள் எஸ்.துரைராஜா, யசந்த கோதாகொட மற்றும் ஜனக் டி சில்வா ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதியரசர் குழாமினால் இந்தத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

# அச்சுவேலியில் ஆலயத்துக்கு முன்பாக இளைஞர் ஒருவர் மீது கோடரித் தாக்குதல்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ். அச்சுவேலி, உளவிக்குளம் ஆலயத்துக்கு முன்பாக நேற்று கோடரி வெட்டுச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உளவிக்குளம் ஆலயத்தின் உப தலைவராகச் செயற்பட்டு வரும் 38 வயதுடைய இளைஞர் ஒருவர் மீது கோடரி வெட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை இரண்டு மோட்டார் சைக்கிள்களில் முகத்தை மறைத்தவாறு வந்த ஐந்து பேர் கொண்ட கும்பல் கோடரியொன்றால் மேற்படி இளைஞரைத் தாக்கியுள்ளனர்.

தாக்குதலுக்குள்ளான இளைஞர் கையில் பலத்த காயத்துக்குள்ளாகி அச்சுவேலி பிரதேச வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.



மேற்படி இளைஞர் வேலைக்குச் செல்வதற்காகச் சென்று கொண்டிருந்தபோது ஆலயத்துக்கு முன்பாக உள்ள பிரதான வீதியில் வைத்து வழிமறித்த கும்பல் சரமாரியாகத் தாக்கியதில் அவர் கைகளில் பலத்த காயமடைந்தார்.

தாக்குதல் சம்பவம் தொடர்பாக அச்சுவேலி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## கேள்விக்குள்ளாகும் அதிகாரம்

இலங்கையில் நிறைவேற்றதிகாரம் தனி மனிதரிடம் - ஜனாதிபதி பதவியில் இருப்பவரிடம் - ஒப்படைக்கப்பட்டிருந்தாலும், அவர் தம்மிஷ்டப்படி அதை முன்னெடுக்க முடியாது, சட்டப்படியே ஆற்ற வேண்டும் என்பதை இலங்கையின் நீதித்துறை, அவ்வப்போது வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்புகள் மூலம் சம்பந்தப்பட்ட தரப்புகளுக்கு நினைவூட்டியே வருகின்றது.

அத்தகைய முக்கிய தீர்ப்பு ஒன்று நேற்றும் வழங்கப்பட்டிருக்கின்றது.

முதன் முதலில் நிறைவேற்றதிகார ஜனாதிபதிப் பதவியை அலங்கரித்த ஜே.ஆர்.ஜெயவர்த்தன தமக்கு கட்டுமட்டு மில்லாத - கேள்விக்கு உட்படுத்தப்பட முடியாத - அதிகாரம் இருப்பதாகவே கருதிச் செயற்பட்டார். 'ஆணைப் பெண்ணாக்குவதைத் தவிர, மிகுதி அதிகாரம் எல்லாம் எனக்கு உண்டு' என்ற சாரப் பட மமதையுடன் அவர் கருத்து வெளியிட்டார் என்றும் கூடக் கூறப்படுகின்றது.

ஆனால் இன்று நிலைமை அதுவல்ல. அந்த நரித்தந்திரசாலியான ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் அரசியல் வாரிசுக்கு - அவரது மருமகனுக்கு - இந்த யதார்த்த நிலை மாற்றம் இன்னும் விளங்கவில்லைப் போலும்.

ஒருவர் ஜனாதிபதியாக இருந்த போது செய்த அல்லது செய்யாமல் விட்ட ஒரு செயலுக்காக அவரை நீதிமன்றின் முன் விசாரணைக்கு உட்படுத்த முடியாது என்ற ஒரு கருத்து நிலைப்பாடு - அரசமைப்பு வியாக்கியானம் - இந்த நிறைவேற்றதிகார ஜனாதிபதி ஆட்சி முறை அறிமுகப்படுத்தப்பட்ட ஆரம்ப காலகட்டத்தில் - ஜே.ஆரின் காலத்தில் - இருந்தது என்னவோ உண்மைதான்.

ஆனால் இன்று அந்த நிலைமை இல்லை. அவ்வப்போது வந்த அரசமைப்பு மாற்றங்களும், திருத்தங்களும், அரசமைப்புச் சரத்துகளுக்கு பொருள் கோடும் அல்லது வியாக்கியானப்படுத்தும் விதத்தில் உயர்நீதிமன்றம் காலத்துக்கு காலம் வழங்கி வந்த தீர்ப்புகளும் அத்தகைய தலைகீழ் மாற்ற நிலைமையை கொண்டு வந்து விட்டன.

அத்தகைய மாற்றத்தை - யதார்த்தத்தை - துலக்கமாக உணர வைத்து நிற்கின்றது நேற்றைய உயர் நீதிமன்றத் தீர்ப்பு ஒன்று.

இந்த மாற்றம் வந்து விட்டதை - ஜே.ஆர்.ஜெயவர்த்தனவின் காலத்திலிருந்த நிலைமை மாறிவிட்டதை - அவரின் மருமகனான இப்போதைய ஜனாதிபதி புரிந்து கொள்பவராக இல்லை போலும் என்றே தோன்றுகின்றது.

கொழும்பு றோயல் பார்க்கில் 19 வயது யுவதியைக் கொலை செய்த சம்பவத்தில் குற்றவாளியாக காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்ட சம்பத் ஜூட் அன்டனி ஜயமஹா என்ற இளைஞரின் மரண தண்டனையை முதலில் ஆயுள் தண்டனையாகவும், மூன்று ஆண்டுகள் கழித்து முற்றாக விடுவித்தும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன பிறப்பித்த மன்னிப்பு ஆணையை உயர் நீதிமன்றம் வெற்றும் வறிதுமாக்கியிருக்கின்றது. மன்னிப்பு விடுதலையை அடுத்து வெளிநாட்டுக்கு சென்று விட்ட ஜயமஹவை மீண்டும் நாட்டுக்குக் கொண்டு வந்து, தண்டனைத் தீர்ப்பை தொடரச் செய்ய நடவடிக்கை எடுக்குமாறும் உயர் நீதிமன்றம் உத்தரவிட்டிருக்கின்றது.

இதேபோன்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பிரபல அரசியல்வாதியான துமிந்த சில்வாவுக்கு வழங்கிய பொது மன்னிப்பு உயர் நீதிமன்றத்தினால் ரத்து செய்யப்பட்டமையால் துமிந்த சில்வா இப்போது சிறையில் வாடுகின்றார்.

இதேபோன்று பொது மன்னிப்பு வழங்கிய ஜனாதிபதிகளின் முடிவுகளைச் சட்டச்சவாலுக்கு உட்படுத்தும் மேலும் சில வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றின் முடிவுகளும் விரைவில் வரும் என நம்பலாம்.

ஜனாதிபதியின் நடவடிக்கைகள் மற்றும் அவர் நடவடிக்கை எடுக்கத் தவறிய விடயங்கள் தொடர்பில் அடிப்படை உரிமை மீறல் வழக்குகள் மூலம் சட்ட நடவடிக்கை எடுக்கவும், நிவாரணம் பெறவும் இப்போது சட்டத்தில் இடம் உண்டு.

அறிவிக்கப்பட்டு, வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டு, ஒரு பகுதி வாக்குச் சீட்டுக்களும் அச்சிடப்பட்டு விட்ட நிலையில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களை, நிதி அமைச்சர் என்ற முறையில் தேர்தலுக்கான செலவின நிதியை வெட்டி, அதை ஒன்றரை வருடங்களாக தடுத்துத் தான் மேற்கொண்டு வரும் ஜனநாயக விரோத நடவடிக்கைக்காக தற்போதைய ஜனாதிபதியும் மன்றின் முன் கைகட்டி வாய் பொத்தி நிற்கும் நிலைமை நிச்சயம் வரும்.



# இந்தியாவின் மக்களவை தேர்தலில் தெரிவான 251 உறுப்பினர்கள் மீது குற்றவியல் வழக்குகள்

இந்தியாவில் நடந்து முடிந்த மக்களவை தேர்தலில் வெற்றி பெற்று புதிதாக தெரிவான 543 மக்களவை உறுப்பினர்களில் 251 பேர் மீது குற்றவியல் வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தெரிவான மொத்த உறுப்பினர்களில் 46 வீதம் என்பதுடன், அவர்களில் 27 பேர் குற்றவியல் வழக்குகளில் தண்டனை பெற்றவர்களாவர்.

2009 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், தற்போது குற்றவியல் வழக்குகளைக் கொண்ட மக்களவை உறுப்பினர்களின் எண்ணிக்கை 55 வீதம் அதிகரித்துள்ளதாக ஆய்வறிக்கைகள் தெரிவிக்கின்றன.

251 மக்களவை உறுப்பினர்களில் 170 பேர் மீது பாலியல் வன்கொடுமை, கொலை, கொலை முயற்சி, கடத்தல் மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் உள்ளிட்ட கடுமையான குற்ற வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

தண்டணை பெற்ற 27 பேர் கொலை, கடத்தல், கொலை முயற்சி, பாலியல் வன்கொடுமை, பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் வெறுப்பு பேச்சு உள்ளிட்ட வழக்குகளில் தண்டிக்கப்பட்டுள்ளனர்.

வெற்றி பெற்ற பா.ஜ.க. உறுப்பினர்கள் 94 பேர் மீதும், காங்கிரஸ் உறுப்பினர்கள் 49 பேர் மீதும், சமாஜ்வாதி உறுப்பினர்கள் 21 பேர் மீதும், திரிணாமுல் காங்கிரஸ் உறுப்பினர்கள் 13 பேர் மீதும், தி.மு.க. உறுப்பினர்கள் 13 பேர் மீதும் குற்றவியல் வழக்குகள் உள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் வழக்குகளை எதிர்கொள்ளும் உறுப்பினர்கள் அதிக எண்ணிக்கையில் மக்களவைக்கு தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பது இதுவே முதல் முறை எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

# இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு விழா திகதியில் குழப்பம்



தேசிய ஜனநாயக கூட்டணியில் அமைச்சுக்களுக்கான பங்கீடு இன்னும் இறுதியாகாத நிலையில் நாளை சனிக்கிழமை நடைபெறவிருந்த மோடியின் பதவியேற்பு விழா ஒத்திவைக்கப்படலாம் என இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

கூட்டணியில் அமைச்சுக்களுக்கான பங்கீடு நிறைவு பெற்ற பிறகு பதவி ஏற்பு விழாவை நடத்த ஏற்பாடு செய்யப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நிலையில், நாளைக்குள் அமைச்சுக்களுக்கான பங்கீட்டை இறுதி செய்ய பா.ஜ.க. மேலிடம் திட்டமிட்டுள்ளது. நாளை அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடு நிறைவுச் செய்யப்பட்டால், நாளை மறுதினம் ஞாயிற்றுக் கிழமை மோடி பதவி ஏற்பார் என்று தகவல் வெளியாகி உள்ளது.

மேலும், மத்திய அமைச்சரவையில் கூட்டணி கட்சிகளுக்கு எத்தனை இடம் ஒதுக்குவது? பா.ஜ.கவில் யார் யாருக்கு அமைச்சர் பதவி வழங்குவது? என்பது குறித்தான ஆலோசனை நடைபெற்று வருகிறது.

ஐக்கிய ஜனதா தளம் தலைவர் நிதிஷ் குமார் 3 முக்கிய மத்திய அமைச்சு பதவிகளையும், இராஜாங்க அமைச்சர் பதவிகளையும் எதிர்பார்த்து பா.ஜ.க. மூத்த தலைவர்களிடம் கருத்து தெரிவித்துள்ளார்.

அதுபோல், லோக்ஜன சக்தி கட்சி தலைவர் சிராக் பஸ்வான், மதச்சார்பற்ற ஜனதாதளம் தலைவர் குமாரசாமி, சிவசேனா கட்சி தலைவர் ஏக்நாத் ஷிண்டே, பீகார் முன்னாள் முதலமைச்சர் ஜிதன் ராம் ஆகியோரும் தலா ஒரு அமைச்சுப் பதவி கேட்கிறார்கள்.

சந்திரபாபு நாயுடு, நிதிஷ் குமார் இருவரும் முக்கிய அமைச்சுக்களை கேட்டாலும், பாரதிய ஜனதா கட்சி 6 முக்கிய அமைச்சகத்தை விட்டுக் கொடுக்க மறுத்துள்ளது.

இதனால் உள்துறை, நிதி, பாதுகாப்பு, சட்டம் மற்றும் தகவல் தொழில்நுட்பம் ஆகிய 6 துறைகளையும் யாருக்கும் ஒதுக்க இயலாது என மோடி திட்டவட்டமாக தெரிவித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மோடியின் பதவியேற்பில் பங்கேற்க மாலைதீவின் ஜனாதிபதிக்கு அழைப்பு

இந்திய பிரதமர் நரேந்திர மோடியின் பதவியேற்பு நிகழ்வுக்கு மாலைதீவின் ஜனாதிபதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

முன்னதாக இலங்கை, பூட்டான், நேபாளம், மொரீசியஸ் மற்றும் பங்களாதேஸ் ஆகிய நாடுகளின் தலைவர்களுக்கும் இந்த பதவி பிரமாண நிகழ்வுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், நரேந்திர மோடி மீண்டும் பிரதமராக தெரிவானமைக்கு மாலைதீவின் ஜனாதிபதி மொஹமட் முய்ஸ/ வாழ்த்து தெரிவித்திருந்த நிலையிலேயே அவருக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

சீன சார்பு கொள்கையை கொண்டுள்ள மாலைதீவின் ஜனாதிபதி, இந்தியாவுக்கு எதிரான போக்கை கடைப்பிடித்து வருகின்றமை காரணமாக இரண்டு நாடுகளுக்கும் இடையில் இராஜதந்திர முறுகல் ஏற்பட்டுள்ளது.





இதற்கு மத்தியில் மாலைதீவின் ஜனாதிபதிக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமையானது புதிய உறவுக்கு வழிவகுக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

# இஸ்ரேலின் வான்வழித் தாக்குதலில் காஸா பாடசாலையில் 40 பேர் பலி



இஸ்ரேல் நேற்று முன்தினம் இரவு நடத்திய வான்வழித் தாக்குதலில் காஸாவின் பாடசாலை ஒன்றில் தற்காலிகமாக தங்கியிருந்த இடம்பெயர்ந்தவர்கள் 40 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

காஸாவின் ரேஉநசையவ பகுதியில் பாடசாலையில் அமைக்கப்பட்டிருந்த தற்காலிக அகதிகள் முகாமில் இருந்தவர்களே கொல்லப்பட்டுள்ளனர் என ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஐக்கிய நாடுகள் சபையினால் இடம்பெயர்ந்த பாலஸ்தீனர்களுக்காக அமைக்கப்பட்டிருந்த ருசேுறுயு பாடசாலையே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளது.

எனினும், ஹமாஸ் அமைப்பினர் தங்கியிருந்த பாடசாலை மீதே தாக்குதல் நடத்தியதாக இஸ்ரேல் இராணுவம் தெரிவித்துள்ளது.

அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்திவிட்டு அதனை சமாளிக்க இஸ்ரேல் பொய்க் கதைகளை கூறி வருவதாக ஹமாஸ் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சிரியாவை உலுக்கிய பஸ் விபத்து: 6 சிறுவர்கள் பலி, 12 பேர் காயம்



சிரியாவில் 50 இற்கும் மேற்பட்ட சிறுவர்களை ஏற்றிச் சென்ற பாடசாலை பஸ் ஆற்றில் விழுந்து விபத்துக்குள்ளாகியுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்த விபத்தில் ஆறு சிறுவர்கள் உயிரிழந்துள்ளனர். 12 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்து வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சம்பவம் சிரியாவின் டார்குஷ் அருகே ஒரோன்டெஸ் பகுதியில் நேற்று இடம்பெற்றுள்ளது.

இந்த நிலையில், சிரிய சிவில் பாதுகாப்பு படையினர் மற்றும் தன்னார்வத் தொண்டர்கள் குழு, சம்பவ இடத்திற்கு விரைந்து மீட்பு பணிகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# இலங்கைக்கான இந்திய ஆதரவு மென்மேலும் தொடர வேண்டும்!

## மோடியை வாழ்த்தி ஜீவன் வலியுறுத்து

இந்தியப் பிரதமராக மூன்றாவது முறையாகவும் வெற்றி பெற்றுள்ள நரேந்திர மோடிக்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்தைத் தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடி ஜனநாயக முறையில் இந்த வெற்றியைப் பெற்றுக்கொண்டமைக்காகவும், இவரின் வெற்றிக்காக வாக்களித்த இந்திய மக்களுக்கும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கின்றேன் என்றும் ஜீவன் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், இந்தியாவை மூன்றாவது முறையாகவும் சிறந்த ஒரு தலைவராக வழிநடத்திச் செல்வீர்கள் என்ற நம்பிக்கையுள்ளது என்று தெரிவித்துள்ள அமைச்சர் ஜீவன் தொண்டமான், இந்தியப் பிரதமராக இருந்த நீங்கள் எமது நாட்டுக்கு வழங்கிய ஒத்துழைப்பைத் தொடர்ந்தும் வழங்குவீர்கள் என எதிர்பார்க்கின்றேன் என்றும் கூறியுள்ளார்.

அத்துடன் எதிர்காலத்தில் இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான நட்பைப் பலப்படுத்தி இரு நாடுகளும் உங்கள் ஒத்துழைப்புடன் புரிந்துணர்வோடு செயற்பட எதிர்பார்க்கின்றேன் என்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# மலையகம் மீதான உங்கள் அக்கறை தொடர வேண்டும்

## மோடியை வாழ்த்தி திகாம்பரம் கோரிக்கை

உலகின் மிகப்பெரிய ஜனநாயக நாடான இந்தியாவுக்கு மூன்றாவது முறையாகவும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள பிரதமர் நரேந்திர மோடி கடந்த காலங்களைப் போல் இலங்கை வாழ் இந்திய வம்சாவளி மலையக மக்கள் மீது தொடர்ந்து அக்கறை காட்ட வேண்டும் என்று தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

அதில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

"பிரதமர் மோடி தலைமையிலான கூட்டணி வெற்றி பெற்று மூன்றாவது முறையாகவும் பிரதமராகும் தங்களுக்கு மனமார்ந்த வாழ்த்துக்களை எமது மக்களின் சார்பில் தெரிவித்துக்கொள்கின்றேன். நான் நல்லாட்சி அரசில் அமைச்சராக இருந்தபோது 2017 இல் இலங்கைக்குத் தாங்கள் விஜயம் செய்தபோது, மலையகத்துக்கும் வருகை தந்து எமது மக்களை நேரடியாகச் சந்தித்திருந்தீர்கள்.

இந்தியா மலையகத் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கிய 4 ஆயிரம் தனி வீட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தியதன் விளைவாக மேலும் 10 ஆயிரம் தனி வீடுகளை கட்டிக் கொடுக்க உறுதியளித்திருந்தீர்கள். அத்தோடு மலையக மாணவர்களுக்கு இந்திய அரசின் புலமைப் பரிசில் உட்பட பல்வேறு உதவிகள் தொடர்ந்து கிடைத்து வருகின்றன. அதற்காக நன்றியையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.



அடுத்து அமையவுள்ள தங்கள் அரசில் தங்களின் பணிகள் சிறப்பாக அமைய வேண்டும் எனவும், இலங்கையில் வாழும் இந்திய வம்சாவளி மக்கள் பயன் பெற வேண்டும் எனவும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் இந்தியா முன்னுரிமை அடிப்படையில் உதவிகளை வழங்க முன்வர வேண்டும் எனவும் கேட்டுக்கொள்கின்றேன்." - என்றுள்ளது.

# இரணைமடுக் குளச் சர்ச்சை; கொழும்பில் நடந்தது என்ன?



கிளிநொச்சி இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்குப் பங்கிடுவது தொடர்பான கலந்துரையாடல் நேற்று வியாழக்கிழமை கொழும்பில் இடம்பெற்றது. இரணைமடு கமக்கார அமைப்புக்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடலில் பங்கு கொண்டனர்.

நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சின் கேட்போர் கூடத்தில் கலந்துரையாடல் இடம் பெற்றுள்ளது.

மேற்படி விடயம் தொடர்பாக கடந்த 16.02.2024 ஆம் திகதி யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களால் கேட்டுக்கொள்ளப்பட்டதற்கு அமைவாகவே இக் கலந்துரையாடல் கொழும்பில் இடம்பெற்றது.

இதன்போது இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான யாழ் மாவட்டம் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களுக்கு எவ்வித பிரச்சினைகளும் ஏற்படாதவாறு ஒரு தீர்க்கமான முடிவினை எட்டுவதற்கான நடவடிக்கைககளை அமைச்சர் ஜீவன் தொண்டமான் எடுத்துரைத்தார்.

### கூட்டத்தில் பங்குகொண்டோர்

யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான சிறிதரன், அங்கஜன் இராமநாதன், தர்மலிங்கம் சித்தார்த்தன், அமைச்சின் செயலாளர் நபீல், நீர் வழங்கல் மற்றும் வடிகால் அமைப்பின் தலைவர், பொதுமுகாமையாளர், அரச அதிகாரிகள், கிளிநொச்சி மாவட்ட விவசாயிகள், பொது மக்கள் எனப் பலரும் பங்குபற்றினர்.

குறிப்பாக இதன்போது இரணைமடு நீர்ப்பங்கீடு தொடர்பான இறுதிப்படுத்தப்பட்ட புதிய நவீன ஆய்வுகளுக்கு அமைவாக சிவில் அமைப்புக்கள், விவசாய அமைப்புக்கள், தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்பு சபை, ஆசிய அபிவிருத்தி வங்கி, ஐ.நா. நீர் முகாமைத்துவம், யாழ் பல்கலைக்கழகம், நீர்ப்பாசன திணைக்களம், ஐ.நா. உணவு மற்றும் விவசாய அமைப்புக்கள் ஆகிய அமைப்புக்கள் மேற்கொண்ட ஆய்வு அறிக்கையை எதிர்வரும் ஆறு மாதங்களுக்குள் பெற்றுக் கொண்ட பின்னர் தீர்மானமிக்க முடிவுகள் எட்டப்படும் என அமைச்சர் உறுதியளித்தார்.



இக்கலந்துரையாடலில் கலந்து கொண்ட சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன் தனது முகநூலில் பதிவிட்டுள்ளார். இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்குப் பங்கிடுவது தொடர்பாக அங்கு உரையாடப்பட்டவைகள் பற்றிய குறிப்பு ஒன்றை அவர் எழுதியுள்ளார்.

மருத்துவருடைய முகநூல் பதிவு பின்வருமாறு :-

இரணைமடு நீரை குடிதண்ணீர்த் தேவைக்கு பயன்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் பெலவத்தையிலுள்ள அமைச்சு கட்டடத்தில் இடம்பெற்றது. இந்த கூட்டத்துக்கு ஒரு பங்குதாரராக நானும் அழைக்கப்பட்டு இருந்தேன்.

கூட்டத்துக்கு அமைச்சர் ஜீவன் தொண்டைமான் தலைமை தங்கினார். நாடாளுமன்ற உறுப்பினர்கள் சித்தார்த்தன், அங்கஜன் மற்றும் சிறிதரன் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்தில் கிளிநொச்சி விவசாயிகளை பிரதிநிதித்துவப்படுத்துகிறார் எனக் குறிப்பிட்டுக்கொண்டு சிவமோகன் என்பவர் இரணைமடுக் குளம் கிளிநொச்சி மக்களுக்கே சொந்தமானது என்றும் யாழ்ப்பாணத்துக்கு குடிதண்ணீர் வழங்குவதற்கு தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டு இருந்தார்.

### ஏற்க மறுப்பு

அதையடுத்து நான் இரணைமடுக்குளத்தின் பிரதான நீரேந்தும் பகுதி வவுனியா மாவட்டத்திலும், குளத்தின் பெரும்பகுதி முல்லைத்தீவு மாவட்டத்திலும் இருப்பதனால் இரணைமடுக் குளம் கிளிநொச்சி மக்களுக்கு மட்டுமே சொந்தமானது என்று தெரிவிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தெரிவித்தேன்.

மேலும் மருத்துவர் என்ற முறையில் குடி தண்ணீர் தேவைக்கு விவசாயத்தை விட முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டேன். மேலும் 1.3 மில்லியன் மக்கள் வாழும் வட மாகாணத்தில் 50 வீதத்துக்கு மேற்பட்ட மக்கள் யாழ். மாவட்டத்தில் வசிக்கும் நிலையில் அவர்களுக்கு அதிகரித்த நீர் தேவை இருக்கும் என்பதையும் சுட்டிக்காட்டினேன்.

அதற்கு பதிலளிக்க முடியாத சிவமோகன் சப்பைகட்டு நியாயமாக நீரை அருந்திய பின்

தொடர்ச்சி ▼



# இரணைமடுக் குளச் சர்ச்சை; கொழும்பில் நடந்தது என்ன?

தொடர்ச்சி▲

விவசாயத்தினால் பெறப்படும் உணவை உட்கொள்வதாலேயே மனிதர்கள் உயிர் வாழ முடியும் என்று தெரிவித்தார்.

இந்த நிலையில் அமைச்சர் ஜீவன் தலையிட்டு மனித உடலில் 60 வீதம் நீராக இருப்பதுடன் அதன் முக்கியத்துவத்தை குறைத்து மதிப்பிட முடியாது என்று தெரிவித்தார்.

## எனது கேள்வி

இந்த நேரத்தில் மனிதன் நீர் இல்லாமல் 3 நாள்களே உயிர் வாழமுடியும். ஆனால் உணவில்லாமல் 3 வாரங்கள் உயிர் வாழ முடியும் என்று நான் தெரிவித்தேன்.

கூட்டத்தில் கலந்து கொண்ட எந்திரிகள் ஒவ்வொரு வருடமும் மழைக்காலத்தில் பெருமளவு நீர் குளத்தில் இருந்து வீணாகக் கடலுக்கு வெளியேறியதாகவும் நீர் தேக்கத்தின் கொள்ளவை அதிகரிப்பதன் மூலம் விவசாயிகளின் தேவையையும் யாழ்ப்பாண மாவட்ட குடிதண்ணீர் தேவையையும் தீர்க்க முடியும் என்று தெரிவித்து இருந்தார்கள்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் அங்கஜன் மற்றும் சித்தார்த்தன் கிளிநொச்சி விவசாயிகளின் வாக்குகளை பெறுவதற்காகவும் அதேநேரம் யாழ்ப்பாண மக்களின் எதிர்ப்பையும் சம்பாதிக்க விரும்பாத நிலையில் உறுதியான கருத்துகளைத் தெரிவிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டிருந்தனர்.

தமிழரசு கட்சியின் தலைவராக வர விரும்பும் சிறிதரன் மாத்திரம் இரணைமடுக்குளம் விவசாயிகளுக்கே சொந்தமானது என்று தெரிவித்து மீண்டும் ஒரு தடவை தனது அரசியல் முதிர்ச்சி அற்ற தன்மையையும் அதேநேரம் தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்கு எதிரான கருத்துகளையும் வெளிப்படுத்தி இருந்தார்.

## புலிகள் ஏற்றிருந்தனர்

புலிகளின் காலத்திலேயே தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்காக இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதை ஏற்றுக்கொண்டிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாண மக்களுக்கு தேவையான குடி தண்ணீரை மருதங்கேணியில் உள்ள கடல்நீரில் இருந்து நன்னீராக்கும் திட்டத்தின் மூலமாக பெறமுடியும் என்ற சிறிதரனின் கருத்தை உடனடியாகவே வட மாகாண நீர் முகாமைத்துவ சபையின் முகாமையாளர் எந்திரி பாரதிதாசன், அந்த திட்டத்தின் மூலம் பெறப்படும் 1 கன மீட்டர் நீருக்கு அதிக செலவாக 300 ரூபாய்க்கு மேல் செலவாகும் என்று கூறி நிராகரித்து இருந்தமை சிறிதரனின் அறியாமையையும் துறைசார் நிபுணர்களின் கருத்தை ஏற்றுக் கொள்ளாத அவரது அகங்காரத்தையும் வெளிப்படுத்தியிருந்தது.

ஒருமித்த முடிவை எடுப்பதற்கு சிவமோகனும் சிறிதரனும் தடையாக இருந்த நிலையில் அமைச்சர் ஜீவன் 2 மாதங்களுக்குள் பங்குதாரர்களைக் கொண்ட குழுவொன்றை அமைத்து அவர்களின் அறிக்கையை பெற்று முடிவெடுத்து இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வழங்குவதாகத் தெரிவித்தார்.

## ஐங்கரநேசனின் நிலைமை

சிவமோகன் அதையும் ஏற்றுக் கொள்ளாமல் வடமாகாணசபை இயங்கியபோது அதன் அமைச்சர் ஐங்கரநேசனினால் அமைக்கப்பட்ட நிபுணர் குழு ஒன்று ஏற்கெனவே இரணைமடு நீரை யாழ்ப்பாணத்துக்கு வழங்குவதற்கு எதிராகப் பரிந்துரை செய்திருப்பதாகத் தெரிவித்தார்.

அப்போது முன்னாள் அமைச்சர் ஐங்கரநேசன் சுன்னாகம் ஒயில் பிரச்சினையில் மின்சார நிறுவனத்துக்கு சார்பாக செயல்பட்டு தமிழ் மக்களுக்கு துரோகம் செய்தது மாத்திரமல்லாமல் இரணைமடுக்குளத்திலும் போலிநிபுணர் குழு அமைத்து தமிழ் மக்களின் தேசிய நலன்களுக்கு எதிராக செயல்பட்டிருப்பதை அறிந்து கொண்டேன்.

இறுதியாக அமைச்சர் ஜீவன் சிவமோகனிடம் அவர்களின் பிறநிதித்துவதுடன் குழு அமைக்கப்படும் என்று உறுதிமொழி வழங்கியதுடன் கூட்டம் முடிவடைந்தது.

தமிழர் தேசிய நலன்கள் தொடர்பான தொலைநோக்கு பார்வையற்றவர்கள் வாக்குகளை சேகரிக்கும் ஒரே நோக்கத்துடன் நாடாளுமன்றத்தில் தமிழர் பிரதிநிதிகளாக இருப்பது ஈழத் தமிழரின் சாபக்கேடு என்றே எடுத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் 2 தலைமுறைக்கு முன்னர் நெடுந்தீவு முதலான நீர்வளம் நலிந்த தீவு பகுதியில் இருந்து வந்து கிளிநொச்சியில் குடியேறியவர்கள் இன்று தம்மை கிளிநொச்சி விவசாயிகளாக அடையாளம் காட்டிக்கொண்டு தமது மூதாதையர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கு குடிதண்ணீர் தர மறுப்பதை காலத்தின் கொடுமை என்று கூறலாமா?

– இப்படி கேள்வி எழுப்பியிருக்கின்றார் சமுதாய மருத்துவ நிபுணர் முரளி வல்லிபுரநாதன்.



# இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்ட காலத்திலும் 44,000 வாகனங்கள் சந்தைக்குள் நுழைந்துள்ளன

## நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தகவல்



இறக்குமதி கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்ட காலப்பகுதியில் 44,430 வாகனங்கள் சந்தைக்குள் விடப்பட்டுள்ளன என நிதி இராஜாங்க அமைச்சர் கலாநிதி ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்தார். அவற்றில் 38,144 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 6,286 கார்கள் உள்ளன என அமைச்சர் சுட்டிக்காட்டினார்.

உள்ளூர் வாகன உற்பத்தியாளர்கள் குழுவுடன் நிதியமைச்சில் நடைபெற்ற கலந்துரையாடலில் இந்தத் தகவல் வெளியாகியுள்ளது.

கட்டுப்பாடுகளை நீக்குவது தொடர்பில் வாகனம் ஒன்று சேர்ப்பவர்களுக்கும் அமைச்சர் சியம்பலாபிட்டியவிற்கும் இடையில் இந்தக் கலந்துரையாடல. இடம்பெற்றது.

வாகன இறக்குமதிக்குக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டாலும், உதிரிப்பாகங்களைக் கூட்டுச்செய்து விற்பனை செய்வது தொடர்ந்து நடந்து வருகிறது.

இக்கலந்துரையாடலில் பல உள்நாட்டு வாகன உற்பத்தி நிறுவனங்களின் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர். வாகன இறக்குமதிக்கு அனுமதி வழங்குவது குறித்து ஆழமான கலந்துரையாடல் இடம்பெற்றது.

இறக்குமதிக் கட்டுப்பாடுகளை நீக்கும் அதே வேளையில், உள்ளூர் வாகனங்களைக் கூட்டுச்செய்யும் வணிகங்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். இறக்குமதிக்கு இந்த தடை விதிப்பது உள்ளூர் வாகன உற்பத்திக்கு ஊக்கம் அளிக்கிறது என்றும், ஒரு நாட்டின் வாகன உற்பத்தியை தொடங்குவது நீண்ட கால செயல்முறை என்றும் அவர்கள் தெரிவித்தனர். உள்ளூர் வர்த்தகங்களை வலுப்படுத்த அரசாங்கம் தொடர்ந்து ஆதரவளித்து வருவதாக அமைச்சர் சியம்பலாபிட்டிய குறிப்பிட்டார்.


# மட்டக்களப்பில் இருவரை ரி.ஐ.டி. விசாரணைக்கு வரும்படி அழைப்பு

**(கனகராசா சரவணன்)**

மட்டக்களப்பு மாவட்ட தமிழரசுக்கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவர் மற்றும் தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளர் ஆகிய இருவரையும் எதிர்வரும் 11,12 ஆம் திகதிகளில் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினரால் அவர்களது வீடுகளுக்குச் சென்று மட்டக்களப்பிலுள்ள அலுவலகத்திற்கு விசாரணைக்கு வருமாறு அழைப்பு விடுத்துள்ளனர்.

மாவட்ட தமிழரசுக்கட்சி வாலிபர் அணி முன்னாள் தலைவரும் அபிவிருத்தி உத்தியோகத்தருமான லோ.திபாகரனை எதிர்வரும் 11ஆம் திகதி விசாரணைக்குவருமாறு கடிதம் ஒன்றை பயங்கரவாத தடுப்பு பிரிவினர் வழங்கியுள்ளனர்.

அதேவேளை தமிழ் இளையோர் மக்கள் இயக்க ஒருங்கிணைப்பாளரும் மனிதவுரிமை செயற்பாட்டாளருமான கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்த ஜீவரெத்தினம் தவேஸ்வரனையும் எதிர்வரும் 11, 12 ஆம் திகதிகளில் விசாரணைக்கு வருமாறு பயங்கரவாதத் தடுப்பு பிரிவினரால் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும், கடந்த காலம் ஒரே நாளில் 11 மணித்தியாலம் 45 நிமிடங்கள் தடுத்துவைக்கப்பட்டு மட்டக்களப்பில் உள்ள பயங்கரவாத தடுப்புப் பிரிவின் அலுவலகத்தில் வாக்குமூலம் பெறப்பட்ட நிலையில் இந்தப் புதிய அழைப்பு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



# திருகோணமலை நீதிமன்ற வழக்குத் தொடர்பாக முகநூலில் விமர்சனம் செய்த நபருக்குப் பிணை

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட நீதிமன்ற வழக்கு தொடர்பாக, முகநூலில் விமர்சனம் செய்த நபர் ஒருவர், ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இரு சரீர பிணைகளிலும் விடுவிக்கப்பட்டுள்ளார்.

திருக்கோணேஸ்வரர் ஆலய நிர்வாகசபை வழக்கு தொடர்பாக முகநூலில் விமர்சனம் செய்தவருக்கு எதிரான வழக்கு நேற்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டபோது அந்த நபரை ஒரு லட்சம் ரூபா காசுப் பிணையிலும், தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான இருவரின் சரீர பிணைகளிலும் விடுவிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் சுந்தரலிங்கம் சிவசங்கரன் என்பவருக்கு எதிராக 22.05. 2024 அன்று திருகோணமலை மாவட்ட நீதிமன்றில் வழக்கு ஒன்று தாக்கல் செய்யப்பட்டிருந்தது. இந்த வழக்கை சட்டத்தரணி நாகராஜா மோகன் தாக்கல் செய்திருந்தார். அவரது மனுவை ஆதரித்து சிரேஷ்ட சட்டத்தரணி இராமலிங்கம் திருக்குமாரநாதன் சமர்ப்பணம் செய்திருந்தார். அவருடன் கனிஷ்ட சட்டத்தரணியாக திருமதி. சி.சண்முகியும் மனுதாரர் சார்பாக இவ் வழக்கில் ஆஜராகியிருந்தார்.

கோணேஸ்வர ஆலயம் தொடர்பாக நீதிமன்றில் ஆஜராகியுள்ள சட்டத்தரணிகளை எதிராளி பகிரங்கத்தில் விமர்சித்திருக்கின்றார் எனவும் இது 2024ஆம் ஆண்டு 8ஆம் இலக்க நீதிமன்ற நியாயசபை அல்லது நிறுவனமொன்றை அவமதித்தல் சட்டத்தின்கீழ் குற்றச் செயலாகும் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. எனவே எதிராளிக்கு நீதிமன்ற அழைப்பாணையை அனுப்புவதற்கான கட்டளையை ஆக்கும்படியாகவும் வழக்காளி சார்பாக ஆஜரான சட்டத்தரணிகளால் மன்றில் கோரப்பட்டிருந்தது.

அதனை ஏற்றுக் கொண்ட நீதிமன்றம் எதிராளிக்கு அழைப்பாணை விடுத்திருந்தது. குறித்த அழைப்பாணையை ஏற்று நேற்றய் நீதிமன்றில் முன்னிலையானபோதே எதிராளிக்கு பிணை வழங்கி நீதிமன்றம் உத்தரவிட்டிருந்தது.

வழக்கு ஜூலை 09ஆம் திகதி மீண்டும் அழைக்கப்படவுள்ளது.



# சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு நேற்று விவசாய அமைச்சினால் சிரதமானப் பணி






சர்வதேச சுற்றுச்சூழல் தினத்தை முன்னிட்டு வடக்கு மாகாண விவசாய அமைச்சின் சுற்றாடல் பிரிவின் ஏற்பாட்டில் நேற்று வியாழக்கிழமை சிரமதானப் பணி முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் மரியதாசன் ஜெகூ தலைமையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு குறித்த அவரது ஆரம்ப உரையோடு முன்னெடுக்கப்பட்ட சிரதமானப் பணியில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு உத்தியோகத்தர்கள், பலாலி வீதியில் கோண்டாவில் சந்தி முதல் திருநெல்வேலி சந்தி வரையான பிரதேசத்தில் உக்காத கழிவுப் பொருள்களை அகற்றும் பணியை மேற்கொண்டனர்.

இந்த வேலைத்திட்டத்திற்கு நல்லூர் பிரதேச சபை கழிவகற்றல் வாகன வசதியை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



# நீதிமன்றம் தடை விதிக்க மறுத்த பின்னரும் ரூ.1,700 படி சம்பளம் இம்மாதம் கிடையாது

## பெருந்தோட்ட நிறுவனங்கள் இழுத்தடிப்புத் தந்திரம்

(ஆ.ரமேஸ்)

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் 1,700 ரூபா சம்பள உயர்வு இம்மாதம் 10 ஆம் திகதி தொழிலாளர்கள் கரம் கிட்டுவதில் சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு 1,700 ரூபா நாளாந்த சம்பளம் வழங்கப்பட வேண்டும் என கடந்த மே மாதம் 21 ஆம் திகதி தொழில் அமைச்சின் செயலாளர் விசேட வர்த்தமானி அறிவித்தல் ஒன்றை வெளியிட்டிருந்தார்.

இந்த விடயத்தில் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் தொழில் அமைச்சர் மனுஷ நாணயக்கார, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் பொது செயலாளர் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோருடன் பல அரசியல் பிரமுகர்கள் தலையிட்டிருந்தனர்.

இந்த நிலையில் இந்த 1,700 ரூபா சம்பளத்தை தம்மால் தொழிலாளர்களுக்கு வழங்க முடியாதென பெருந்தோட்ட முதலாளிமார் சம்மேளனம் எதிர்ப்புக் காட்டி வந்திருந்தது.

அதேநேரத்தில் தொழில் அமைச்சினால் வெளியிடப்பட்டிருந்த 1,700 ரூபா சம்பளம் தொடர்பான வர்த்தமானியை சவாலுக்கு உட்படுத்தி இவ்வர்த்தமானிக்கு எதிராகத் தடை எழுத்தாணை பிறப்பிக்க வேண்டும் எனக் கோரி 21 பெருந்தோட்ட நிறுவனங்கள் மேன் முறையீட்டு நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தன.

இருப்பினும் இது தொடர்பான வழக்கை விசாரணைக்கு எடுத்துக் கொண்ட மேன் முறையீட்டு நீதிமன்றம் தோட்ட தொழிலாளர்களுக்கான 1,700 ரூபா சம்பளம் தொடர்பில் தொழில் அமைச்சு வெளியிட்ட வர்த்தமானிக்கு எதிராக இடைக்கால தடையுத்தரவு பிறப்பிக்க முடியாது எனத் தெரிவித்திருந்தது.

நீதிமன்ற முடிவைத் தொடர்ந்து இம்மாதம் பத்தாம் திகதி வழ்கப்படவுள்ள மாதச் சம்பளம் 1,700 ரூபா என்ற அடிப்படையில் கணக்கை முடித்து தோட்ட நிர்வாகங்கள் வழங்கும் என்ற நம்பிக்கையில் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் இருந்தனர்.

இருந்த போதிலும் இம்மாத சம்பளத்தின் இறுதி கணக்கு நேற்று முன்தினம் 5 ஆம் திகதி தோட்ட நிர்வாகங்களால் முடிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இம்மாத சம்பளத்தில் தொழிலாளர்களுக்கு உயர்த்தப்பட்ட 1,700 ரூபா உள்வாங்கப்படாது வழமையாக வழங்கப்பட்டு வந்த 1000 ரூபா படியே சம்பளக் கணக்கு முடிக்கப்பட்டுள்ளது எனத் தோட்டத் தொழிற்சங்கத் தலைவர்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இது குறித்து தோட்ட தொழிற்சங்க தலைவர்கள் தமது தோட்ட காரியாலயங்களுக்கு சென்று வினவியபோது 1,700 ரூபாப்படி தொழிலாளர்களுக்கு இம்மாத சம்பள கொடுப்பனவை வழங்க தோட்ட நிறுவன தலைமையகத்தில் இருந்து சுற்றுநிருபம் ஏதும் தமக்குக்குக் கிடைக்கவில்லை என தோட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் உயர்த்தப்பட்டுள்ள 1,700 ரூபா சம்பளம் இம்மாத சம்பளத்தில் கிடைக்காது போல் உள்ளதாக தோட்ட தொழிற்சங்க தலைவர்கள் சந்தேகம் வெளியிட்டுச் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதேநேரத்தில் நீதிமன்ற முடிவை மதித்து தோட்ட நிறுவனங்கள் மே 21 ஆம் திகதி வெளியிடப்பட்டிருந்த வர்த்தமானி அறிவித்தல் படி 1,700 ரூபா சம்பள அடிப்படையில் இம்மாதக் கொடுப்பனவை வழங்க வேண்டும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் தோட்ட நிறுவனங்கள் தமது சுற்றுநிருபத்தைத் தோட்டக் காரியாலயங்களுக்கு அனுப்பாது இழுத்தடிப்பு செய்வது நீதிமன்ற உத்தரவை அவர்கள் மீறுகின்ற செயலாகாதா என்று தோட்ட தொழிற்சங்க தலைவர்களும், தொழிலாளர்களும் கேள்வியெழுப்புகின்றனர்.

எனவே இந்த விடயத்தில் தொழில் அமைச்சு மற்றும் தொழிற்சங்கங்கள் தலையிட்டு அடுத்தக்கட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் தொழிலாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.





## மட்டக்களப்பு தேவாலயத்தில் வைத்துப் படுகொலை செய்யப்பட்ட

# நாட்டுப்பற்றாளர் சந்திரா பெர்னாண்டோ அடிகளின் 36ஆவது நினைவேந்தல் நேற்று உணர்வுபூர்வமாக









(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து சுட்டுக்கொல்லப்பட்ட மனித உரிமை செயற்பாட்டாளர் அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ அடிகளின் 36 ஆவது ஆண்டு நினைவேந்தல் புனித மரியால் தேவாலயத்தில் அமைக்கப்பட்டிருக்கும் சமாதியில் நேற்று வியாழக்கிழமை நடைபெற்றது. உறவினர்கள் மற்றும் மக்கள் ஒன்றிணைந்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

1988ஆம் ஆண்டு ஜுன் மாதம் 06ஆம் திகதி இந்திய இராணுவத்துடன் இணைந்து செயற்பட்ட ஆயுதக்குழு ஒன்றினால் மட்டக்களப்பு புனித மரியால் பேராலயத்தில் வைத்து அருட்தந்தை சந்திரா பெர்னாண்டோ சுட்டுக் கொல்லப்பட்டார். அவரின் சமாதி புனித மரியால் தேவாலயத்தில் அமைக்கப்பட்டுள்ளது.

அவரின் 36 ஆவது தினைதினத்தையிட்டு மட்டக்களப்பு சர்வ மத ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்று அன்னாரது சமாதியில் நினைவேந்தல் இடம்பெற்றது. இதில் சர்வமத தலைவர்கள், வண. பிதாக்கள், மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள், உறவினர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டு அன்னரின் ஆத்மசாந்தி வேண்டி அவரின் சமாதியில் உள்ள திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து ஈகைச்சுடர் ஏற்றி மலர் தூவி விசேட பிராத்தனையுடன் அஞ்சலி செலுத்தினர்.

வணக்கத்துக்குரிய பங்குத்தந்தை சந்திரா பெர்னாண்டேர் 09.08.1948 அன்று மட்டக்களப்பு புளியந்தீவில் பிறந்தார். தனது ஆரம்பக் கல்வியை சென் மேரிஸ் பாடசாலையிலும், உயர் கல்வியை புனித மிக்கல் கல்லூரியிலும் கற்றார் .தனது குருக்கல்வியை இந்தியா பெங்களூரிலும், சென்னையிலும் பயின்று1972. 09. 21 ஆம் நாள் அன்று குருப்பட்டத்தை மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கிளரின் ஆண்டகை முன்னிலையில் ஏற்றார்.

உதவித் பங்குத்தந்தையாக மட்டக்களப்பு நகர் தேவாலயத்திலும், மட்டக்களப்பு தாண்டவன்வெளி மாதா தேவாலயத்திலும், திருகோணமலை மாதா தேவாலயத்திலும், சின்னக்கடை திருகோணமலை தேவலையத்திலும் பணிபுரிந்து 1978 ஆம் ஆண்டு மட்டக்களப்பு ஆயர் இல்லத்தின் நிருவாகத்துக்கு நிதிப்பொறுப்பாளராக செயலாற்றினார்.

1981 ஆம் ஆண்டு மறைக்கோட்ட முதல்வரானார் இதே காலப்பகுதியில் கல்லாறு தேவாலயத்தில் பங்குத்தந்தையாகவும் இருந்தார் . 1984 ஆம் ஆண்டு மட்டக்களப்பு மறைக்கோட்ட முதல்வராக பொறுப்பேற்றார். உயிர் நீத்த பின்னர் விடுதலைப் புலிகளின் தலைவரால் அருட்தந்தைக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.





# அம்பாறை மேலதிக அரச அதிபராக ஜெகராஜன் நியமனம் பெறுகின்றார்





**(பாறுக் ஷிஹான்)**

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அதிகாரியான காரைதீவு பிரதேச செயலாளர் சிவஞானம் ஜெகராஜன் நியமிக்கப்பட்டுள்ளார்.

பொதுச்சேவை ஆணைக்குழுவின் பரிந்துரைக்கமைவாக பொது நிர்வாக அமைச்சு இந்நியமனத்தை வழங்கியுள்ளது.

முன்பு மேலதிக அரசாங்க அதிபராக இருந்த வேதநாயகம் ஜெகதீசன் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக (அபிவிருத்தி) பதவி உயர்வு பெற்று செல்கின்ற காரணத்தினால் இந்நியமனம் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றது.

2007 இல் இலங்கை நிருவாக சேவையில் இணைந்து கொண்ட காரைதீவைச் சிவ.ஜெகராஜன் காரைதீவு பிரதேச செயலகத்தில் உதவி பிரதேச செயலாளராகவும், பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி வந்த வேளையிலே கல்முனை வடக்கு உப பிரதேச செயலாளராகவும் கடமையாற்றி இருந்தார்.

2013 இல் திருக்கோவில் பிரதேச செயலாளராக நியமிக்கப்பட்டு அங்கு சிறப்பான பணியாற்றி வந்த வேளையில் 2019 இக் மீண்டும் காரைதீவுக்கு நியமிக்கப்பட்டார்.

ஐந்து வருட கால சேவையை பூர்த்தி செய்து தற்பொழுது அவர் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபராக நியமிக்கப்பட்டிருக்கின்றார்.

இவரது இடத்திற்கு நாவிதன்வெளி பிரதேச செயலாளர் திருமதி சஜிந்ரன் இராகுலநாயகி பதில் பிரதேச செயலராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இதே வேளை போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக வி. ஜெகதீசன் பதவியேற்றார்.

அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வி.ஜெகதீஸன் பதவியுயர்வு பெற்று போக்குவரத்து நெடுஞ்சாலைகள் அமைச்சின் மேலதிக செயலாளராக நேற்று முன்தினம் தனது கடமைகளைப் பொறுப்பேற்றார்.

அம்பாறை மாவட்டத்தில் மேலதிக அரசாங்க அதிபராக நியமனம் பெற்றுள்ள வி.ஜெகராஜன் மூவின மக்களுக்காகவும் சமமாகப் பணியாற்றிய உயர் அதிகாரியாவார்.




# கொழும்பு கோட்டையிலிருந்து எந்த ரயிலும் இன்று புறப்படாது

## ரயில் சாரதிகள் பணிப்பகிஷ்கரிப்பு

லொக்கோமோட்டிவ் ஒப்பரேட்டிங் எஞ்சினியர்ஸ் தொழிற்சங்கத்தை சேர்ந்த இரண்டு ரயில்வே பணிமனைகளில் கடமையாற்றும் ரயில் சாரதிகள் நேற்று நள்ளிரவு முதல் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

பதவி உயர்வு வழங்கப்படாமை, ஆள்சேர்ப்பில் நிலவும் தாமதம் உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகளுக்குத் தீர்வு வழங்குமாறு கோரி இவர்கள் இந்த பணிப்பகிஷ்கரிப்பை முன்னெடுக்கின்றனர்.

இதனால் இன்று காலை கொழும்பு கோட்டையிலிருந்து எந்தவொரு ரயிலும் புறப்படாதென லொக்கோமோட்டிவ் ஒப்பரேட்டிங் எஞ்சினியர்ஸ் தொழிற்சங்கத்தின் செயலாளர் எஸ்.ஆர்.சி.எம். சேனாநாயக்க தெரிவித்துள்ளார்.




# 55 இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு வெள்ளப் பாதிப்பால் விடுமுறை அறிவிப்பு

மேல் மாகாணம், கொட்டிகாவத்தை மற்றும் கொலன்னாவை கல்வி வலயங்களில், வெள்ள நிலைமையினால் பாதிக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பு மத்திய நிலையங்களாகச் செயற்படும் பாடசாலைகளில் இன்று கல்வி நடவடிக்கைகளை முன்னெடுக்காதிருப்பதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, 55-இற்கும் மேற்பட்ட பாடசாலைகளுக்கு இன்று விடுமுறை வழங்கப்பட்டுள்ளதாக மேல் மாகாண ஆளுநர் ரொஷான் குணதிலக்க தெரிவித்துள்ளார்..

அத்துடன், இரத்தினபுரி மாவட்டத்தின் நிவித்திகல கல்வி வலயத்தின் எலபாத மற்றும் அயகம பிரிவுகளிலுள்ள அனைத்துப் பாடசாலைகளுக்கும் இன்று விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது.

காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் பாதுகாப்பு மத்திய நிலையங்களாக செயற்படும் பாடசாலைகளையும் இன்று மூட தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஏனைய பாடசாலைகள் வழமைபோன்று செயற்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# நாடாளுமன்றின் அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பலாங்கொடை கஸ்ஸப தேரர் கைது செய்யப்பட்டார்

இலங்கை மின்சார சட்டமூலத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து நாடாளுமன்றத்திற்கு அருகில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் பலாங்கொடை கஸ்ஸப தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

இலங்கை மின்சார சட்டமூலத்தினூடாக அடிப்படை உரிமை மீறப்படுவதால், அரசமைப்பிற்கு ஏற்ற வகையில் சட்டமூலத்தை நிறைவேற்றுவதற்கு நாடாளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மை அவசியமாகும் என உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.



உயர் நீதிமன்றத்தினால் பரிந்துரைக்கப்பட்ட திருத்தங்களை மேற்கொள்ளும் பட்சத்தில், சட்டமூலத்தை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடியும் என அண்மையில் சபாநாயகர் நாடாளுமன்றத்தில் தெரிவித்திருந்தார்.

எவ்வாறாயினும், நாடாளுமன்றத்தில் எரிசக்தி மற்றும் போக்குவரத்து துறைசார் மேற்பார்வைக் குழு முன்வைத்த விடயங்கள் மற்றும் நீதிமன்றத்தினால் முன்வைக்கப்பட்ட திருத்தங்களுடன் இலங்கை மின்சார சட்டமூலம் நிறைவேற்றப்படும் என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் கஞ்சன விஜேசேகர குறிப்பிட்டிருந்தார்.

இதேவேளை, எதிர்வரும் ஜூலை முதலாம் திகதி முதல் மின் கட்டணம் குறைக்கப்படவுள்ளதாக அமைச்சர் கஞ்சன விஜேசேகர நாடாளுமன்றத்திற்கு அறிவித்துள்ளார்.

# மின்சார சட்டமூலம் நாடாளுமன்றத்தில் 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

இலங்கை மின்சார சட்டமூலம் நேற்று நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட்டு 44 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

நேற்று சட்டமூலம் மீதான இரண்டாம் மதிப்பீடு விவாதத்தின் பின்னர் எதிர்க்கட்சியினால் வாக்கெடுப்பு கோரப்பட்டதுடன், அதற்கமைய இடம்பெற்ற வாக்கெடுப்பில் சட்டமூலத்திற்கு ஆதரவாக 103 வாக்குகளும் எதிராக 59 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

அதனையடுத்து, குழுநிலையின் போது சட்டமூலத்திற்கு திருத்தங்கள்



முன்வைக்கப்பட்டன. மூன்றாவது மதிப்பீடு வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது.

மின்சக்தித் துறையில் மேற்கொள்ளப்படும் மறுசீரமைப்புகளை மேற்கொள்ளத் தேவையான ஏற்பாடுகளை முன்னெடுக்கும் நோக்கில், இந்தச் சட்டமூலம் கடந்த ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.




# அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு; பேராதனை பல்கலை மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

பேராதனை பல்கலைக்கழக மாணவர்கள் பல்கலைக்கழக வளாகத்திற்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுப்பட்டனர்.

இதன்போது, அரசாங்கத்தின் கல்விக் கொள்கைக்கு எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதுடன், கல்விசாரா ஊழியர்களின் கோரிக்கைகள் தொடர்பில் உரிய தீர்வினை வழங்குமாறு வலியுறுத்தப்பட்டது.

கொழும்பு – கண்டி பிரதான வீதியை மறித்து மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்த நிலையில், அந்த வீதியூடான போக்குவரத்திற்கும் இடையூறு ஏற்பட்டிருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.



# வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்திகரிக்க 10,000 ரூபா கொடுப்பனவு

பலத்த மழையுடனான வானிலையால் ஏற்பட்ட வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வீடுகளை சுத்திகரிப்பதற்கு 10,000 ரூபா கொடுப்பனவு வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்காக அரசாங்கத்தினால் 150 மில்லியன் ரூபா நிதியை மாவட்ட செயலகங்களுக்கு விடுவிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளார் என பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் பிரமித்த பண்டார தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இடர் முகாமைத்துவ அமைச்சில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

# விளையாட்டுத்துறை வைத்திய நிபுணர் பேராசிரியர் சிறி கன்னங்கர காலமானார்

இலங்கையின் பிரபல விளையாட்டுத்துறை வைத்திய நிபுணர், பேராசிரியர் சிறி கன்னங்கர ஆஸ்திரேலியாவில் காலமானார்.

ஹொரணையில் பிறந்த அன்னார், 1977ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்தார்.

விளையாட்டுத்துறை மருத்துவத்தில் சர்வதேச புகழ்பெற்ற அவர், பார்சிலோனா மற்றும் அட்லாண்டா



ஒலிம்பிக்கில் விளையாட்டுத்துறை வைத்திய நிபுணராகப் பணியாற்றியுள்ளார்.

முத்தையா முரளிதரனின் பந்து வீச்சு தொடர்பில் சந்தேகம் எழுப்பப்பட்ட போது, அவர் சார்பில் அன்னார் பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய ராசி பலன்கள் - 07.06.2024




இன்று இனிமையான நாளாக இருக்கும். உங்கள் கடின முயற்சி மூலம் உங்களுக்கு சாதகமான பலன்கள் கிடைக்கும்.

நீங்கள் புத்திசாலித்தனத்துடன் ஆற்றும் பணிக்காக உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டுக் கிடைக்கும். உங்கள் கீழ்பணிபுரிவோர்களிடமும் நல்லுறவை பராமரிப்பீர்கள்.

பாதுகாப்பற்ற உணர்வை தவிர்ப்பதற்கு முயற்சி செய்யுங்கள். உங்கள் குழந்தையின் வளர்ச்சி பற்றிய கவலை உங்களிடம் காணப்படும்.

இன்று உங்களால் பணம் சேமிக்க இயலும். எதிர்பாராத வகையில் இன்று பணவரவு காணப்படும்.

தேக ஆரோக்கியம் சிறந்த நிலையில் காணப்படும்.




பல தடைகளுக்குப் பின் உங்களுக்கு திருப்தி கிடைக்கும். உங்கள் மனதை ஓய்வாக வைத்துக் கொள்ள வேண்டும்.

பணிச்சுமை அதிகரித்துக்கொண்டே போவதைக் காண்பீர்கள். பணியில் தவறுகள் நேரலாம்.

உங்கள் வார்த்தைகள் உங்கள் துணையின் மனதை காயப்படுத்தும். நல்ல புரிந்துணர்வை ஏற்படுத்த இதனைத் தவிர்க்க வேண்டும்.

இன்று பணத்தட்டுப்பாடு காணப்படும். அதிகரிக்கும் செலவினங்கள் காரணமாக நீங்கள் கவலைக்குள்ளாவீர்கள்.

செரிமானம் சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு ஆளாவீர்கள்.




பொழுது போக்கு நிகழ்ச்சிகள் உங்களுக்கு மகிழ்ச்சி அளிக்கும். பாடல்கள் கேட்பதன் மூலம் ஆறுதல் கிடைக்கும்.

பணிச்சூழல் கடினமாக இருப்பதாக உணர்வீர்கள். கடினமான வேலை செய்ய வேண்டியிருப்பதன் காரணமாக மகிழ்ச்சியின்றி காணப்படுவீர்கள்.

உங்கள் துணையிடம் உணர்ச்சி வசப்படுதலை தவிர்க்க வேண்டும்.உங்கள் மனதில் உள்ள குழப்பம் உங்கள் மகிழ்ச்சியை தடுக்கும்.

இன்று சீரற்ற பணப்புழக்கம் காணப்படும்.உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளும் நிலைமை காணப்படாது.

நீங்கள் தியானம் மேற்கொள்வதன் மூலம் மனதை அமைதியாகவும் ஓய்வாகவும் வைத்துக் கொள்ள முடியும்.




இன்று நீங்கள்அனுசரித்துச் செல்ல வேண்டும். முக்கியமான முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதால் அதிக கவனம் செலுத்த வேண்டியிருக்கும்.

உங்கள் துணையிடம் நீங்கள் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும். இதன் மூலம் நல்ல புரிந்துணர்வு ஏற்படும்.

உங்கள் நிதநிலைமையை சமாளிப்பதை நீங்கள் கடினமாக உணர்வீர்கள். உங்கள் தகுதிக்கு மீறி செலவு செய்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்துக்காகப் பணம் செலவு செய்ய நேரலாம். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.




இன்று இலாபகரமான நாளாக இருக்கும். அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். இன்று நல்ல விஷயங்களை செய்வீர்கள்.

உங்கள் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். அவர்கள் உங்கள் பணிகளைப் பாராட்டுவார்கள். உங்கள் திறமைகள் மதிக்கப்படும்.

உங்கள் துணையிடம் அன்பை வெளிப்படுத்துவீர்கள். உங்கள் துணையை நன்கு புரிந்து கொள்வீர்கள்.

உங்களுக்கு தொலைதூரத்திலிருந்து பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. இந்தப் பணம் உங்களுக்கு உதவிகரமாக இருக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் பற்றிக் கவலைப்படத் தேவையில்லை. சிறப்பாக இருக்கும்.




சாதகமான வாய்ப்புகளை பயன்படுத்திக்கொள்வதன் மூலம் முன்னேறலாம். ஆன்மீக நோக்கத்துக்கான பயணங்கள் சாதகமான பலன்களைத் தரும்.

உங்கள் சிறந்த பணியாற்றும் முறை காரணமாக நீங்கள் நற்பலன்களைப் பெறுவீர்கள். உங்கள் சக பணியாளர்களின் ஆதரவைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையிடம் நேர்மையாக நடந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந்துணர்வு அமையும்.

இன்று பணவரவு அதிகமாகக் காணப்படும். உங்களுக்கு ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் கிடைக்கும்.

உங்கள் தேக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். நீங்கள் உங்கள் உடலை சீராக வைத்திருப்பீர்கள்.




உங்களுக்கான சரியான வழியை தேர்ந்தெடுக்க நீங்கள் கற்றுக் கொள்ளுங்கள். நீங்கள் திறமையாக திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

மேலதிகாரிகளுடன் சச்சரவு ஏற்பட வாய்ப்புள்ளது. அவர்களிடம் அனுசரித்து நடந்து கொள்வதன் மூலம் சச்சரவுகளைத் தவிர்க்கலாம்.

உங்கள் துணையிடம் வன்மையாக நடந்து கொள்வதை தவிர்க்கவும். உங்கள் துணையிடம் நல்லுறவை தக்க வைத்துக்கொள்ள முயலுங்கள்.

இன்று பணவரவுக்குச் சாதகமான சூழ்நிலை அமையாது. நீங்கள் பணத்தைச் சேமிக்க வேண்டும்.பணத்தை பத்திரமாக பாதுகாப்பாக கையாண்டால் பண இழப்பை தவிர்க்கலாம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது.




இன்று மகிழ்ச்சிகரமான நாளாக இருக்காது. இன்று குழப்பமான நிலையில் இருப்பீர்கள். நீங்கள் எடுக்கும் முடிவுகள் தவறாக இருக்கும்.

வளர்ச்சி குறைந்து காணப்படுகின்றது. பணிச்சுமை அதிகரித்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்துக்குள் முடிக்க நீங்கள் திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடனான தொடர்பு கொள்ளலில் பிரச்சினைகள் காணப்படும். இன்றைய நாளின் வனப்பு அதனால் கெடும்.

நிதிநிலைமையைப் பொறுத்த வரை இன்று அவ்வளவு சிறப்பாக இருக்காது. நீங்கள் சேமிக்க வேண்டியது அவசியம்.

தோல் சம்பந்தமான பிரச்சினைகளைச் சந்திப்பீர்கள். எண்ணெய்ப் பதார்த்தங்களைத் தவிர்க்கவும்.

# இன்றைய ராசி பலன்கள் - 07.06.2024




புதிய தொடர்புகள் இன்று உங்களுக்கு உதவிகரமாக இருக்கும். இன்று பயணங்கள் காணப்படும்.

பணியிடச் சூழல் சாதகமாக இருக்கும். உங்கள் உழைப்புக்குப் பலன் கிடைக்கும். நீங்கள் பாராட்டைப் பெறுவீர்கள்.

உங்கள் துணையுடனான உறவில் சமநிலையோடு இருங்கள். இன்றைய நாள் சிறப்பாக இருக்கும்.

உங்களிடம் போதிய அளவு பணம் காணப்படும். உங்கள் குடும்பத்துக்காகப் பணம் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியப் பிரச்சினைகள் காணப்படாது. நீங்கள் சிறந்த ஆரோக்கியத்துடன் காணப்படுவீர்கள்.




முறையான திட்டமிடல் மூலம் கடினமான விஷயங்களையும் எளிதில் கையாளலாம்.

நீங்கள் முறையாக பணிகளை ஆற்ற இயலாது. உங்கள் பணியில் தவறுகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

இன்று உங்கள் துணையுடன் மகிழ்ச்சி குறைந்து காணப்படும். இன்று உங்களால் நல்லிணக்கத்தை பராமரிக்க இயலாது.

ஆன்மிக காரியங்களுக்காக பணத்தை செலவு செய்வீர்கள். இது உங்களுக்கு ஆறுதலைத் தரும். பயணங்களால் செலவுகள் ஏற்படும்.

ஆரோக்கியம் சுமாராக இருக்கும். தோள்களில் வலிகள் ஏற்பட வாய்ப்பு உள்ளது.




உங்கள் பிரச்சினைகள் பற்றிக் கவலைப்படாமல் மகிழ்ச்சியுடன் இருங்கள். கோவிலுக்குச் சென்று வருவது ஆறுதலைத் தரும்.

நீங்கள் செய்த பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். பணிகள் ஆற்றுவதில் சில தாமதங்கள் காணப்படும்

நீங்கள்இன்று உங்கள் துணையுடன் வெளிப்படையாகப் பேசுவீர்கள். அதனால் நல்ல புரிந்துணர்வு காணப்படும்.

உங்களிடம் இருக்கும் பணம் திருப்திகரமாக இருக்கும். உங்கள் சேமிப்பு அதிகரிக்கும்.

கண்களில் தொற்று போன்ற சிறிய உபாதைகள் காணப்படும். தகுந்த மருத்துவ சிகிச்சை உங்கள் நலனைப் பாதுகாக்கும்.




சில தடங்கல்களுக்குப் பின் உங்களுக்குத் திருப்தி கிடைக்கும். உங்கள் கவலைகளை மறக்க மனதை அமைதியாக வைத்திருங்கள்.

உங்கள் பணியில் சில அசௌகரியங்களை எதிர்கொள்வீர்கள். பணிச் சுமை அதிகரித்துக் கொண்டேயிருக்கும்.நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும் என எதிர்பார்க்கப்படுவீர்கள்.

இன்று உங்கள் பேச்சில் கடுமை காணப்படும். இது உங்கள் நாளின் இனிமையைக் கெடுக்கும்.

பணப்புழக்கம் சிறப்பாக இருக்காது. இன்று அதிகரிக்கும் செலவினங்கள் காணப்படும்.

உங்கள் கால்களில் வலிகள் ஏற்படலாம். உங்கள் ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.

